Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

## "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

### GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

### TESTIMONIALS

- **Customers…**
  - Up to Mar. 15 : 842 Nos.
  - Up to Feb. 15 : 831 Nos.
- **Performance Mar. 15 …**
  - Turnover growth : 16.62%
  - Employment growth : 0.56%
  - 100% Attendance : 11.79%

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

### OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Treatment Equipments.

Fib Tec COMPOSITE – FRP/ GRP Equipments.

HydroGen – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm
(CBSE Pattern School)




## வெற்றி வாழ்க்கை

ராஜாவுக்கு அன்று பிறந்த நாள்! மந்திரிகள், பிரபுக்கள் ராஜாவின் மேல் பரிவுடையோர் என பலர் பரிசுகளை கொடுத்து ராஜாவை வாழ்த்திச் சென்றனர். அப்படி கொண்டுவரப்பட்ட பரிசு பொருட்களில் இரண்டு அழகான கழுகு குஞ்சுகளும் இருந்தன. அதைப் பார்த்த ராஜா அவை இரண்டையும் அரண்மனை தோட்டத்திற்கு கொண்டு வரச் சொன்னார். அரண்மனை தோட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட கழுகு குஞ்சுகள் இரண்டையும் ஒரு மரக்கிளையின் மேல் அமர வைத்தனர். அதில் ஒன்று கொஞ்ச தூரம் பறந்துவிட்டு, பின் திரும்பவும் தன் இடத்திற்கே வந்து அமர்ந்து கொண்டது. ஆனால் அடுத்த கழுகு குஞ்சோ கொஞ்சங்கூட பறக்க முயற்சிக்கவில்லை. அதை முந்தின நாள் எங்கு விட்டுச் சென்றிருந்தார்களோ, அதே இடத்தில் தான் அடுத்த நாளும் அமர்ந்திருந்தது. நாட்கள் கடந்தன…ஒவ்வொரு நாளும் ராஜா தோட்டத்தில் உலாவும் போது அந்த கழுகு குஞ்சு பறக்கிறதா என்று பார்ப்பார். ஆனால் அந்த கழுகு குஞ்சு அமர வைத்த இடத்திலேயே தான் இருந்தது. அரண்மனை வேலையாட்கள் அந்த கழுகு குஞ்சை பறக்க வைப்பதற்கு எவ்வளவு முயற்சி செய்தனர். ஆனால் எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

இதைக் கண்ட ராஜா கிராமத்தில் வசிக்கும் யாரையாவது உடனே அழைத்து வந்து அந்த நபரிடம் இந்த பொறுப்பை கொடுங்கள்' என்றார். அது போலவே கிராமத்திலிருந்து ஆள் வரவழைக்கபட்டார். அடுத்த நாள் ராஜா தோட்டத்தில் உலாவும்படி சென்றபோது, அவருக்கு பயங்கர ஆச்சரியமாயிருந்தது. வழக்கமாய் அவர் தோட்டத்திற்குள் வரும் போது ஒரு கழுகு குஞ்சு தான் பறக்கும். ஆனால் அன்று இரண்டு கழுகு குஞ்சுகளுமே அழகாக பறந்து கொண்டிருந்தன. உடனே கிராமவாசியை அழைத்து "எப்படி பறக்காத கழுகு குஞ்சை பறக்க வைத்தாய்?" என்று கேட்டார். அதற்கு அந்த கிராமவாசி பணிவுடன் 'ராஜா நான் வேறு ஒன்றும் செய்யவில்லை. அந்த கழுகு குஞ்சு அமர்ந்திருந்த கிளையை வெட்டி விட்டேன் அவ்வளவுதான். அது தானாக பறக்க ஆரம்பித்து விட்டது' என்றான். நான் பறக்க வேண்டும் என்பதும், என்னால் பறக்க முடியும் என்பதும் கழுகு குஞ்சிற்கு புரியவில்லை. ஆனால் கிளை வெட்டப்பட்டபோது தான், கழுகு குஞ்சிற்கு அவ்வுண்மை புரிந்தது.

நாம் வெற்றி வாழ்க்கை வாழ வேண்டும் என்பதும்,? நம்மால் வெற்றியாய் வாழ முடியும் என்பதும் நமக்கு புரியவில்லை. இந்த உண்மையை புரிவதற்காகவே சவாலான சூழ்நிலைகளை தேவன் அனுமதிக்கிறார். கடந்து வந்த பாதைகளை நினைவு கூர்ந்து வாழ்க்கையில் முன்னேற்ற வழியில் செல்வோம்.

Compiled by Ms. P. E. Nancy
Director - Admin

---

### உயர்ந்த மனிதனின் வாழ்வு மூன்று வகையில் இருக்கும்.

1. ஒழுக்கத்தோடிருப்பதால் கவலையற்று இருப்பான்.
2. அறிவாளியாயிருப்பதால் குழப்பங்களற்று இருப்பான்.
3. துணிவாக இருப்பதால் அச்சமின்றி இருப்பான்.

— புத்தர்

## FUNCTIONAL WISHES



**MAY DAY**
**1st MAY**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| | : M/s. Jeya Clinic |
| | Tel: 098408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | | |
|---|---|---|
| **Mr. T. Stephen** | - Production | 02nd May |
| **Mr. R. Saravanan** | - Production | 03rd May |
| **Mr. M. Jegatheesh** | - Production | 04th May |
| **Mr. M. Venkatraman** | - Production | 04th May |
| **Mrs. C. Bavani** | - Admin | 04th May |
| **Mr. D. Raj Kumar** | - Production | 05th May |
| **Mr. S. Dhilip Kumar** | - Production | 05th May |
| **Mr. G. Balu** | - Fibtec | 05th May |
| **Mr. K. Sethuraman** | Fibtec | 08th May |
| **Mr. T. Raja Singh** | Fibtec | 10th May |
| **Mr. D.S. Anish** | - Facilitation | 10th May |
| **Mr. S. Thommai Antony** | - Finance | 10th May |
| **Mr. S. Chinnathangam** | - Coating | 10th May |
| **Mrs. S. Jayanthi** | - Coating | 10th May |
| **Mr. S. Lingathurai** | - Project | 13th May |
| **Mr. L. Marimuthu** | - Fibtec | 15th May |
| **Mr. M. Raj Kumar** | - Production | 16th May |
| **Mr. S. Lawrence** | - Production | 20th May |
| **Mr. P. Porselvan** | - Production | 20th May |
| **Mr. B. Babu** | - Production | 20th May |
| **Mr. K. Saravanan** | - Production | 20th May |
| **Mr. S. Kalidasan** | - Purchase | 20th May |
| **Mr. T. Dinesh** | - Production | 21st May |
| **Miss. L. Menaka** | - Facilitation | 25th May |
| **Mr. P. Karnan** | - Production | 25th May |
| **Mr. M. Ramesh** | - Production | 31st May |

**Best Wishes from Tiaano Employees**

## கான்.:.பிடன்ஸ் கார்னர்

ஒரு ஊரில் பெரிய கனி தரும் மாமரம் ஒன்று இருந்தது அந்த மாங்கனிகளுக்காக மரத்தின் அடிவாரத்திலேயே ஞானி ஒருவர் உட்கார்ந்திருந்தார், பழங்கள் வெளியில் போய்விடுமே என்று! அப்போது அந்த வழியே வந்த முனிவர் **ஒரு பழம் வேண்டும்** என்று சொல்ல அதுவும் உடனே விழுந்தது. முனிவருக்கு பலத்த சந்தோஷம்.

இதுவரை கிடைக்காத பழம் நமக்கு கிடைத்து விட்டதே என்று! ஞானி பார்த்தார் நாமும் மரத்திடம் பழம் ஒன்று கேட்போமா? என்று நினைத்து **ஒரு பழம் வேண்டும்** என்று சொன்னார். ரெம்ப நேரம் ஆகியும் பழம் விழவில்லை. எட்டிய தூரத்தில் மேலே இருந்து ஒரு விதைதான் விழுந்தது. ஆகா! பழம் விழுந்து விட்டது என்று நினைத்து ஓடி போய் எடுத்து மேலே பார்த்தார் காகம் ஒன்று இருந்தது.

ஒருவேளை முனிவர் எடுத்து சாப்பிட்டு போட்ட விதைதானோ? என்று நினைத்து காகத்திடம் கேட்க காகமும் கா...கா...கா...என்று கத்தியது. சரிதான் என்று நினைத்து முனிவரை முறைத்தப்படி ஏமாந்துவிட்டோமே! என்று நடை பயணத்தை தொடர்ந்தார் ஞானி!!!

—கான்.:.பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## வெற்றிகரமான ஆளுமை!

நாம் தொட்ட காரியங்கள் எல்லாம் வெற்றி பெற வேண்டும் என்றே அனைவரும் விரும்புகிறோம். எனவே, வெற்றிகளை ஈட்டித் தரும் ஆளுமை மிக்கவராக வலம் வர வேண்டும் என்ற எண்ணமும் மேலோங்குகிறது. ஆகவே, நமக்குத் தெரிந்தோ, தெரியாமலோ வெற்றிகரமான ஆளுமைக்கு முன்மாதிரியாகத் திகழும் மனிதர்களை அடையாளம் கண்டு, அவர்களைப் பின்பற்றுவதில் கவனம் செலுத்துகிறோம்.

இந்த மண்ணில் எத்தனையோ சாதனையாளர்கள் இருக்கின்றனர். ஆனால், அவர்கள் அனைவருமே ஒரே வகை ஆளுமை கொண்டவர்களாக இருப்பதில்லை. அதைப்போல், சாதாரண மனிதர்களின் ஆளுமைகளும் ஒவ்வொருவரிடம் வேறுபட்டே காணப்படுகிறது. தங்களுடைய ஆய்வு நோக்கங்களுக்கு ஏற்ப ஆளுமைகளில் வெவ்வேறு வடிவங்களை ஆராய்ச்சியாளர்கள் வகைப்படுத்தி இருக்கின்றனர்.

வாழ்க்கையில் ஒருவர் பல நிலைகளில் செயலாற்ற வேண்டியுள்ளது. தன்னை கவனித்துக்கொள்வது மட்டுமின்றி, குடும்பத்தினர், நண்பர், சமூகம் மற்றும் தான் சார்ந்துள்ள நிறுவனத்துக்கும் உரிய கடமைகளைச் செய்ய வேண்டியுள்ளது. இவற்றை வெற்றிகரமாகவும் சிறந்த முறையிலும் செய்து முடிக்க வேண்டும். இதற்கு, உரிய ஆளுமையை அடைய வேண்டியதும், அதை முன்னிலைப்படுத்த வேண்டியதும் கட்டாயம்.

வெற்றிகரமான ஆளுமையை அடைவதற்கு, மக்கள், சமூகம், நாடு மற்றும் நிறுவனம் எனப் பல தரப்பையும் திருப்திப்படுத்தும் சிறப்புப் பண்புகளை வளர்த்துக்கொண்டு, தன்னுடைய பங்கை முழுமையாக அளிக்க வேண்டும். வெற்றிகரமான ஆளுமைமிக்கவராவதற்குப் பல்வேறு நிலைகளுக்கும் ஏற்ற சிறப்புப் பண்புகளும், தகுதிகளும் தேவை.

## தெரிந்து கொள்வோம்

### வெற்றிலை

- வெற்றிலையின் காம்பே பல நோய்களை குணமாக்கக் கூடியது.
- வெற்றிலையில் கால்சியம், இரும்புச்சத்து ஆகியன அதிகம் உள்ளது.
- குழந்தைகளுக்கு சீரண சக்தி பெற வெற்றிலைச் சாறை கொடுப்பர்.
- இந்த வெற்றிலைச் சாறானது பசியை தூண்டக்கூடியது.
- கபம், சீதளம், வாதம், பித்தம் நீக்கும், வெற்றிலையை எண்ணெயில் முக்கி, விளக்கில் காட்டி நெஞ்சில் போட்டால், கபத்தால் உண்டான இருமல், மூச்சுமுட்டல், மூச்சு சிரமம் நீங்கும்.
- தீக்காயங்களுக்கும், வீக்கத்திற்கும் வெற்றிலையை வைத்துக் கட்டலாம்.
- தலைக்கனம், நீர் ஏற்றம், பசிமந்தம், தொண்டைக் கம்மல் நீங்கும்.
- மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே வெற்றிலை பயன்பாட்டில் இருந்து வருகிறது.
- இது தவிர வெற்றிலையைப் பயன்படுத்தி பல நோய்களையும் குணப்படுத்தலாம்.
- அரை டம்ளர் தேங்காய் எண்ணெயில் 5 வெற்றிலையை போட்டு கொதிக்க விடவும்.
- இலை நன்கு சிவந்ததும் வடிகட்டி பாட்டிலில் அடைத்து வைத்துக் கொண்டு சொறி, சிரங்கு, படைக்கு தடவி வந்தால் நல்ல குணம் கிடைக்கும்.
- வெற்றிலையைக் கசக்கிச் சாறு எடுத்து அந்த சாற்றில் சிறிதளவு கற்பூரத்தைச் சேர்த்துக் குழப்பி தலை வலியுள்ள இடத்தில் தடவினால் தலை வலி உடனே குணமாகும்.
- முற்றின வெற்றிலையைச் சாறு பிழிந்து அதில் இரண்டு அவுன்ஸ் சாற்றுடன் 3 மிளகு அதே அளவு சுக்கு ஆகியவற்றை ஒரு தேக்கரண்டி தேனுடன் கொடுத்தால் இரைப்பு மூச்சுத் திணரல் குணமாகும்.
- கோவில் விசேஷமாக இருந்தாலும் சரி, வீட்டு விசேஷமாக இருந்தாலும் சரி முக்கியமாக இடம் பெறும் பொருட்களில் வெற்றிலையும் ஒன்று.

Collected from Internet

உதாரணமாக, மாணவர்களுக்கு நல்ல கல்வியை வழங்குவதற்குரிய தகுதி, ஓர் ஆசிரியருக்கு அவசியம். அதுவே ஒரு படைவீரர் என்றால், எதிரி நாட்டை எதிர்த்து சண்டையிடக்கூடிய தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

அன்றாட வாழ்க்கையில் வெவ்வேறு குணாதிசயங்கள் கொண்ட மனிதர்களை சரியானபடி அணுகும் திறமையும், வெற்றிகரமான ஆளுமைக்குரிய சிறப்புப் பண்புகளில் குறிப்பிடத்தக்கவை. வாழ்வாதாரத்துக்காக பணம் சம்பாதிக்க இயலாத நிலை, உடல் உறுதியின்மை, அறிவுத் திறன் குறைபாடு, மோசமான பயிற்சிகள், சமூகநீதி மறுக்கப்படுதல், வேலைவாய்ப்பின்மை மற்றும் கடின உழைப்பைத் தவிர்த்தல் போன்ற காரணங்களால் வறுமைக்கு தள்ளப்படுகிறோம். ஒருவர் மீது சமூகம் கொண்டுள்ள அபிப்பிராயத்தில் வறுமை பிரதிபலிக்கும். பொருளாதார இழப்பில் இருப்பவருக்கும், அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கும் "வறுமை" எனும் வடிவில் அதிக பாதிப்பு உண்டாகும். இந்த மிகப்பெரிய தடையை முறியடிக்கும் சக்தி, கடின உழைப்புக்கு மட்டுமே உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

Compiled by Mr. K. Manivannan
Marketing

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி XXXX)

### காட்சியும் கட்டுப்பாடும்

நல்ல வேளையாக, பையனுக்கு நன்றாகவே சமைக்கத் தெரியும். ஆனால், அரிசி, பருப்பு, இன்னபிற சமாசாரங்களெல்லாம் எங்கே வைக்கப்பட்டிருக்கின்றன என்பது மட்டும் தெரியாது. ஆகவே, மளிகைச் சாமான்களைத் தேடுகிறேன் பேர்வழி என்று, ஏதேதோ டப்பாக்களை உருட்டி, பாத்திரங்களை திறந்து போட்டு, மாவுகளைக் கொட்டி வீணாக்கி களேபரம் உண்டாக்கி விடுகிறான்.

இந்தப் பிரச்சனைக்கு யார் காரணம்?

வேண்டிய பொருளை, ஒழுங்கான முறையில் தேடிப் பார்க்காத பையன் ஒரு காரணம்தான்! என்றாலும், சமையலறையில் எது எங்கே இருக்கிறது என்று தெளிவாக அறிவிக்காத குடும்பத்தலைவியும் ஒரு முக்கியக் காரணம்.

அறிவிப்பது என்றால், மைக் வைத்துக்கொண்டு ஸ்பீக்கரில் அலறுவது அல்ல. எந்நேரமும் தான் சமையலறையினுள் இருப்பது சாத்தியமில்லை என்பதால், இந்தப் பொருள்கள் வேண்டுமானால், இந்த இடத்தில் தேடினால் கிடைக்கும் என்று எல்லாருக்கும் தெரியும்படி எழுதிப் போட்டுவிடுவது.

உதாரணமாக, குட்டி குட்டியாக அழகான ஸ்டிக்கர் லேபிள்கள் கிடைக்கின்றன. இவற்றில் அரிசி, உழுந்தம்பருப்பு, துவரம் பருப்பு என்று தெளிவாக எழுதி அந்தந்த பாத்திரங்களின் மீது ஒட்டிவிட்டால், யாருக்கும் எந்தக் குழப்பமும் ஏற்பட வாய்ப்பே இல்லை.

பாத்திரங்களில் மட்டும் ஒட்டினால் போதாது. பருப்புகள், காய்கறிகள், மசாலாக்கள், பொடிவகைகள் என்று அந்த அலமாரிகளில் என்னென்ன வகைப் பொருள்கள் கிடைக்கும் என்பதையும் பொதுவாக எழுதி ஒட்டிவிடுவது நல்லது.

## கவிதைகள்

### அழகில் பலவிதம்

நல்ல மனதிற்கு சாந்தம் அழகு!
குடும்பத்திற்குள் புரிந்து நடப்பது அழகு!
உண்ணும் போது உபசரிப்பு அழகு!
நோயின் போது பரிவு அழகு!
பெரியோர் முன் மரியாதை அழகு!
சிறியோர் முன் பொறுமை அழகு!
நட்பிற்கு ஆறுதல் அழகு!
கோபங்கள் முன் மௌனம் அழகு!
அழகுக்கு அழகு செய்ய சிரிப்பு அழகு!
மலர்ந்த முகமே தெய்வீக அழகு!

Compiled by Mrs. C. Bavani
Administration

### நட்பு

உன் கூட பிறக்கவில்லை
உனக்கு நான் உடன் பிறப்புமில்லை
இருந்தும்
உன்னை பிடிக்கிறது
உள்ளங்களால் ஒன்றாகி
உறவுகளில் கலந்திருக்கும்
உடன் பிறவா நம்
உறவுக்கு
இன்றல்ல நாளையல்ல
என்றென்றும் வாழ்வு உண்டு.

### எழுந்திரு

விடியும் என்ற எண்ணத்தில் உறங்க
செல்லும் நீ...
முடியும் என்ற எண்ணத்தோடு
எழுந்திரு...!
அனைத்தையும் சாதிக்கலாம்.

Compiled by Mrs. P. Seevajothi
Design

## சிந்தனைக்கு

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள். சோம்பல் உதவாது. பொறாமையையும் ஆணவத்தையும் பற்றிய கருத்தை எல்லாம் ஒரேயடியாகத் தூர எறிந்துவிடு. முழு வலிமையோடு செயல் புரிவதற்கான ஆர்வத்துடன் செயல்களத்திற்கு வா.

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

இதனால் நமக்கு இரட்டை லாபம், அதிக அனுபவமில்லாதவர்கள் சமையலறையில் புழங்க நேர்ந்தால், அவர்கள் எந்தக் குழப்பமும் இல்லாமல் வேண்டிய பொருள்களைத் தேடி எடுத்துக் கொள்ளலாம். இது தவிர, எல்லாருமே பருப்பு அலமாரியில் பொடிவகைகளை வைக்கக்கூடாது என்று ஓர் ஒழுங்குடன் செயல்படலாம். அனைவருக்கும் தேடும் நேரம் குறைகிறது.

இதைத்தான், 'காட்சி ரீதியான கட்டுப்பாடு (Visual Control) என்று வருணிக்கிறது. 'செய்டன்' எந்தப் பொருள் எந்த இடத்தில் இருக்கிறது என்பதில் யாருக்கும் குழப்பமே இருக்கக் கூடாது, எல்லாம் தெள்ளத் தெளிவாகக் கண்முன்னே தெரியவேண்டும்.

பெக் போர்ட் போன்ற சவுகரியங்கள் மிகவும் பயனுள்ளவைதான். ஆனால், நம்மிடமிருக்கும் எல்லாக் கருவிகளையும் அதில் மாட்டி வைக்கக்கூடாது. மாறாக, நமது பணியிடம் மொத்தத்தையும் ஒரு பெரிய 'பெக் போர்ட்' போல் ஒழுங்குப் படுத்தி விட்டால், அதன் பிறகு எந்தக் குழப்பத்திற்கும் வாய்ப்பே இல்லை.

விஷீவல் கன்ட்ரோலுக்கு இன்னோர் உதாரணம் வேண்டுமானால் – பேருந்து நிலையம், ரயில் நிலையம் மற்றும் விமான நிலையங்கள் மூன்றையும் கவனித்துப் பார்க்கலாம்.

பேருந்து நிலையங்கள் பெரும்பாலும் திறந்தவெளி மைதானங்கள் போல்தான் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆங்காங்கே பிளாட்ஃபாரங்கள் செருகப்பட்டிருந்தாலும், எந்த பிளாட்ஃபாரத்தில் எந்த ஊருக்குச் செல்லும் பேருந்துகள் வந்து நிற்கும் என்பது தெளிவாகக் காட்சிப் படுத்தப்படவில்லை.

இதனால், புதியவர்கள் அந்தப் பேருந்து நிலையங்களுக்குச் சென்றால், ஈரோடு பஸ் எங்கே வரும் சார்? என்று யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு வேளை அந்த நபர் ஏதோ குழப்பத்தில் தவறான திசையைக் காட்டிவிட்டால், பிரச்சனை நமக்குத்தான்.

ஆனால், நல்லவேளையாகப் பேருந்து நிலையங்களில் வேறொருவிதமான விஷீவல் கன்ட்ரோல் இருக்கிறது. எல்லாப் பேருந்துகளிலும், அது எந்த ஊருக்குச் செல்லும் என்று தெளிவாக எழுதி மாட்டியிருக்கிறார்கள்.

தொடரும்...

## ELECTROLYZER CASING

